GCI

**பாடம் 2**

# கிறிஸ்தவ குடும்பம்

## முகவுரை

### பாடத்தின் நோக்கம் :

- ✓ கணவன் மனைவி உறவைப் புரிந்து கொள்ள
- ✓ கூடி வாழ்தல் குறித்த வேதாகம கொள்கைளைப் அறிந்து கொள்ள
- ✓ நாம் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களைக் கண்டறிய

## பாட மேற்பார்வை

### I. கிறிஸ்தவக் கணவன்

அ. ஆவிக்குரிய தலைவன்

ஆ. மனைவியின் மரியாதைக்குரியவர்

இ. தன் மனைவியை நேசிப்பவர்

ஈ. மனைவியுடன் வாழ்பவர்

உ. தன் மனைவியைப் புரிந்து அறிந்திருக்கிறவர்

ஊ. மனைவியை மதிக்கிறவர்

எ. மனைவியைப் போஷித்துக் காப்பவர்

ஏ. மனைவியுடன் நெருங்கிய தொடர்புடையவர்

ஐ. விளைவு

GCI

## 2. கிறிஸ்தவ மனைவி

அ. தன் கணவனின் தலைமைத்துக்குக் கீழ்ப்படிபவள்

ஆ. அவனுடைய தலைமையை மதிப்பவள்

இ. தன் கணவரைப் புகழ்பவள்

ஈ. பாராட்டி ஊக்கம் அளிப்பவள்

உ. பிறரால் வாழ்த்தப்படுபவள்

ஊ. சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி உடையவள்

எ. நன்றியறிதலுள்ள ஆவி உடையவள்

ஏ. சூழ்நிலைக் கேற்ப செயல்படுபவள்

## I. கிறிஸ்தவக் கணவன்

"விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள் புருஷராயிருங்கள் திடன் கொள்ளுங்கள் உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது".

1கொரிந்தியர் 16: 13,14

தேவ மனிதனிடம் இருக்க வேண்டிய எட்டு அடிப்படைத் தகுதிகள்.

### அ. ஆவிக்குரிய தலைவன்

முதலாவதாக தனது குடும்பத்திற்கு
"ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்".

1தீமோத்தேயு 3: 5

ஒருமனிதனுடைய முதல் ஊழியம் அவனது மனைவிக்கும் அவன் பிள்ளைகளுக்கும் செய்ய வேண்டியதே

GCI

1. உதாரணம்: நோவா பேழையைக் கட்டுதல் எபிரெயர் 11: 7

அ. விசுவாசத்தினால் ⟹ கீழ்படி எபிரெயர் 11:8

ஆ. எச்சரிப்பு பெற்றான் 2தீமோத்தேயு 3:1, மத்தேயு 24:37

இ. பயபக்தியுடன் செயல்பட்டான் யோபு 1:1,5; நீதிமொழிகள் 16:6

ஈ. கட்டினான் 1 கொரிந்தியர் 3:9

உ. இரட்சிப்பு லூக்கா 11:21-22 ; 12:35-39

2. 1 தீமோத்தேயு 3:4 ⟹ கிரேக்கத்தில் ⟹ "முன் நிற்பவன்" – ஒரு தலைவனாக மனிதன் தன் குடும்பத்திற்கு முன்பாக நிற்பவன்

3. 1 கொரிந்தியர் 11:3 குடும்பத்தின் தலைவன் ⟹ தேவனால் கொடுக்கப்பட்ட பதவி

4. மாற்கு 10:43-45 ஒரு ஊழியன்

5. உபாகமம் 5:6-9 போதகன் எபேசியர் 6:4
நீதிமொழிகள் 13:24; 22:6,15 ; 23:12 ; 19:18; 29:15,17

6. உபாகமம் 29: 18 தரிசனம் பெற்ற மனிதன்

உங்கள் குழந்தைகள் வாழ்வின் நோக்கத்தை அறிந்து கொண்டு, தங்கள் முழுத் திறனையும் அடைய உதவி செய்யுங்கள்.

GCI

## ஆ. மனைவியின் மரியாதைக்குரியவர்

இந்த மரியாதை கேட்டுப் பெறுவதல்ல, உங்கள் மனைவி, பிள்ளைகள் மற்றும் ஏனையோரிடமிருந்து சம்பாதிக்கப்படும் ஒன்று.

தீத்து 1 : 6-10

1. கர்த்தரை நேசிக்கிறான் ⟹ ஜெபிக்கும் மனிதன்

2. கர்த்தருஜடய வார்த்தையை நேசிக்கிறான் ⟹ வேத பாடம்

சங்கீதம் 1

3. பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவன் எபேசியர் 5:18

4. ஆவியால் நடத்தப்படுபவன் கலாத்தியர் 5:18

5. அவரது வாழ்வில் ஆவியின் கனிகள் கலாத்தியர் 5:19-25

6. தேவ சுபாவத்தின் பங்காளி 2 பேதுரு 1:4-11

## இ. மனைவியை நேசிப்பவர்

எபேசியர் 5:25

அன்பு கொடுக்கிறது / தியாகம்

இயேசுவின் உதாரணம் : பிலிப்பியர் 2:5-8

1. இயேசு தன் மணவாட்டியுடன் ஒப்பந்தம் செய்து இருக்கிறார். அவர் உடன்படிக்கை ஏற்படுத்தி அதைக் காத்துக் கொள்ளும் தேவன் ஏசாயா 54:10

வேதத்தில் தேவனால் ஏற்படுத்தப்பட்ட 8 உடன்படிக்கைகள்:

GCI

**உடன்படிக்கை ஏற்படுத்தும் விதம்:**

அ. நிபந்தனை அல்லது வாக்குறுதியை ஏற்றுக் கொள்ளுதல்

ஆ. இரத்தஞ் சிந்துதல் ஆதியாகமம் 15:9

இ. உடன்படிக்கையின் அடையாளம் ஆதியாகமம் 9:12

வானவில் 15:7 தேசம்

ஈ. பெயர் மாற்றம் ஆதியாகமம் 17:5

உ. இருவரும் ஒருவாராகிறார்கள் – உடன் சுதந்திரவாளிகள் – ஒருவரிடம் போரிட்டால் மற்றவரிடமும் போரிடுவது தான் வாஸ்தவ நிலை

திருமணம் ஒரு உடன்படிக்கை மல்கியா 2:14

சபையாகிய மணவாட்டியுடன் கிறிஸ்து செய்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலான ஒப்பந்தம்.

இவ்வொப்பந்தத்தின் உந்துசக்தி /அன்பின் வெளிப்பாடு:

i. தியாகம் – "ஜீவனைக் கொடுத்தார் எபேசியர் 5: 25 தனிப்பட்ட வாழ்வுக்குப் பதில் மரணம்"

ii. உண்மை – "நான் உன்னை விட்டு விலகுவதில்லை" எபிரெயர் 13:5

iii. அளிப்பு – "இவையெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்"

iv. பாதுகாப்பு – "எதுவும் உங்களைச் சேதப்படுத்தது"

v. செழிப்பு – "உடன் சுதந்தரவாளிகள்"

பாலுறவுச் செயல்பாடு என்பது உடன்படிக்கையை ஏற்படுத்தும் செயல்பாடு. விபச்சாரம் உடன்படிக்கையைக் கெடுக்கிறது.

2. உடன்படிக்கையின் விளைவுகள்

"அவர்கள் ஒரே மாமிசமாயிருப்பார்கள்" ஆதியாகமம் 2: 21–25

GCI

**அ) ஒரே சரீரத்தின் அர்த்தம்**

**மனிதன் மூன்று பாகங்களை உடையவன் I தெசலோனிக்கேயர் 5: 23**

**ஆதாம் ஏவாளுக்கு முழுமையான ஒற்றுமை இருந்தது :**

**ஆவி – ஆத்துமா – சரீரம்**

**அவர்கள் ஒருவராய் இருந்தனர் எபேசியர் 5: 28**

**நிர்வாணம் வெளிப்படை**

**வெட்கமின்மை உண்மை**

**ஒற்றுமை (ஒரு மனம்)**

**மத்தேயு 18: 18 – 19**

**ஆ) சாத்தான் இந்த உறவின் வல்லமையை உணர்ந்து, அதை அழிக்க முற்பட்டான். அவர்களது அதிகாரத்தை இவன் விரும்பினான்.**

i. **ஆதியாகமம் 3: 7** **சுயநோக்குடைவனாய் மாறினான் ஒருவரிடமிருந்து ஒருவர் ஒளித்துக் கொண்டனர்.**
ii. **ஆதியாகமம் 3: 8** **தேவனிடமிருந்து மறைத்துக்கொண்டனர். திருமணத்தில் தேவன் இருக்க வேண்டும்.**
iii. **ஆதியாகமம் 3: 12** **எதிரி யாரென புரிந்து கொள்ளவில்லை. தங்கள் பாவத்தை நியாயப்படுத்தினர்.**
iv. **ஆதியாகமம் 4: 1** **சரீரப் பிரகாரமான ஐக்கியம் மட்டும் விலக்கப்பட்டது.**

**இ) இழந்துபோன உண்மையான தரத்தை மீட்கவும் புதுப்பிக்கவும் இயேசு வந்தார்.**

**மத்தேயு 19: 3 – 9, மாற்கு 10: 2 – 12 லூக்கா 16: 15,18**

**மீட்புக்கு முன்பாக :**

**இருதயக் கடினத்தினிமித்தம் விவாகரத்து அனுமதிக்கப்பட்டது.**

GCI

நமது கடின இருதயத்தை மாற்ற இயேசு வந்தார்.

எரேமியா 32: 39

ஆண்டவருடைய மூலத் திட்டத்தில் விவாகத்தோ, பிரிவோ இருந்ததில்லை. இயேசு தமது சீஷருக்குப் போதிக்கையில் விவாசரத்திற்கு எந்தச் சாக்குப்போக்கையும் கொடுக்கவில்லை.

மாற்கு 10: 11.12

“வேசித்தன முகாந்திரத்தினாலொழிய கடின இருதயமுள்ளள பரிசேயருக்கு சொன்னதன் மூலம் விவாகரத்திற்கு எந்தச் சாக்குப்போக்கையும் கொடுக்கவில்லை.”

கடின இருதயமுடைய மக்களுக்கு மோசேயின் பதிலைக் குறித்த தெளிவுரை

கணவனோ, மனைவியோ உயிருடன் இருக்கும்போத மறுமணம் செய்து விபச்சாரச் செயல் ஆகும்.

ரோமர் 7:3, லூக்கா 16:18, மாற்கு 10: 11,12

I கொரிந்தியர் 7:1 இரு பரிகாரங்கள் 1.தனித்திரு

2.ஒப்புரவாகு

ரோமர் 8:1 ஆக்கினைத் தீர்ப்பு இல்லை

## ஈ. மனைவியுடன் வாழும் கணவர்

I பேதுரு 3:7

“அவர்களுடனே வாழ்ந்து” / சேர்ந்திருக்கும் வாழ்வு / பிரிந்து வாழ்வது அல்ல

துவைக்கும், சமையல் செய்யும் வேலைக்காரி அல்ல.

GCI

லூக்கா 4:18 சேர்ந்து வாழ்தல் சுகம் தருகிறதா/

முழுமை அடையச் செய்கிறதா

1.ஏற்றுக்கொள்தல் X எதிர்த்தல் நாம் பாவிகளாயிருக்கையில்... அவர் நம்மைத் தெரிந்து கொண்டார்.

2. அங்கீகாரம் X அங்கீகரியாமை

வார்த்தைகள் ! அவைகள் உச்சரிக்கப்படும் விதம்

மாற்கு 10 : 21 இயேசு அவனைப் பார்த்து மனதுருகினார்.

3. அரவணைப்பு X விட்டுவிலகுதல் உன்னதப்பாட்டு

லூக்கா 24 : 39 என்னைத் தொட்டுப் பாருங்கள்

மாற்கு 6 : 56 தொட்ட அனைவரும் சொஸ்தமானார்கள்

4. ஒப்புரவாகுதல் – சரியான உறவைப் புதுப்பித்தல் மத்தேயு 5 :21–24

5. மன்னிப்பு 1கொரிந்தியர் 13 5 "அன்பு தனக்கிழைக்கப்பட்ட தீங்கை எண்ணிக் கொண்டிருப்பதில்லை"

1 பேதுரு 4: 8 "எல்லாவற்றிற்க்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள். அன்பு திராளான பாவங்களை மூடும்."

வரையறை: எந்தத் தீங்கையும் அல்லது கடனையும் இலவசமாய் விட்டு விலகுதல்; எல்லாவித உரிமையான வருத்தங்கள்/ ஆதங்கங்களை விட்டுக் கொடுத்தல். மன்னிப்பு தேவனுடைய கட்டளையாயிருக்கிறது.

அ. நாம் மன்னித்தால் , மன்னிக்கப்படுவோம் மத்தேயு 6:14–15

ஆ. மன்னியாமை நாம் அடிமைத்தனத்தில் கட்டி வைக்கிறது மத்தேயு 18:23–35

GCI

I. சரீர, மனரீதியான வியாதி

II. பிசாசின் வேராயிருக்க வாய்ப்பு

III. இருதரப்பினரையும் பாதிக்கிறது. யோவான் 20: 25

இ. தேவ வாக்குத்தத்தங்களைத் தடை செய்கிறது மத்தேயு 5:23,24

மாற்கு 11:25

உங்கள் வருத்தங்களை மற்றவர்களிடம் முற்படாதிருங்கள்.

நீதிமொழிகள் 17:9

ஈ. நமது வாழ்க்கைத்துணை மனந்திரும்பினால் மட்டுமே மன்னிக்க வேண்டும் என்ற தேவை இல்லை.

உதாரணம் – இயேசு லூக்கா 23 : 34

ஸ்தேவான் அப்போஸ்தலர் 7:60

உ. இத்தனை முறை மட்டுமே மன்னிக்க வேண்டும் என்ற வரையறை கிடையாது. மத்தேயு 18 :22

i. அன்பு தவறை மனதில் வைத்துக் கொண்டிருப்பதில்லை.

I கொரிந்தியர் 13:5

அன்பு திரளான பாவங்களை மூடும் I பேதுரு 4: 8

ii. வாழ்கைகத்துணை தொடர்ந்து தவறு செய்து கொண்டிருந்தால்: தேவனைப் போல் மன்னியுங்கள்.

ஏசாயா 43:25, சங்கீதம் 103:12

ஊ. மன்னிப்பு மனப்பூர்வமான ஒரு செயல் உணர்வுகள் பின் தொடரும்.

எ. துனையை அல்ல, நம்மையே சோதித்தறிய வேண்டும்.

GCI

i. சுய நீதி

மத்தேயு 7:1-5 லூக்கா 6:37

பெரிய, சிறிய பாவமென்றில்லை. தேவனுக்கு முன்பாகப் பாவம் பாவமே I யோவான்2:4, 3: 4

ii. நாம் நியாயந்தீர்க்கிறவர்களைப் போல மாறுகிறோம்

iii. தேவனிடம் இருந்து பிரிதல்

மத்தேயு 6:14-15, நீதிமொழிகள் 28:13

நாம் செழிப்படைய மாட்டோம்.

iv. கசப்பு எபிரெயர் 12 :15

நம்மை அழிக்கிறது பிறரைப் பாதிக்கிறது இருதயத்தைக் கடினப்படுத்துகிறது. பிற பாவங்களைப் பிறப்பிக்கிறது. அன்பை நெருக்கிக் கொல்கிறது,

v. பிறரது தவறை பெரிதுப்படுத்தல் இவ்வாறு செய்வது மிக எளிது

vi. நம்மை நாமே மன்னிப்போம்

vii. பிறரை மன்னிப்போம்

<u>உ. தன் மனைவியைப் புரிந்து அறிந்திருக்கிறவர்</u>

I பேதுரு 3:7

1. மனைவியைப் புரிந்து கொள்ள முயலுங்கள். உங்கள் புரிந்து கொள்ளுதலை வெளிப்படுத்தும் வழிகள்:

அ. பாதுகாப்பு கொடுத்தல் – மூடுதல் ரூத் 3:9 அவர்களுக்கு உதவுங்கள்

GCI

ஆ. கவனமாகச் செவிக்கொடுத்தல். அவள் உண்மையாகச் சொல்ல விரும்புவது என்ன?

இ. உணர்வுகளைப் புரிதல் – ஆவி, ஆத்துமா, சரீரம்

ஈ. அவளது பலம், பலவீனங்கள் அறிதல்

உ. அவளது வரங்களையும், திறமைகளையும் அறியுங்கள்

ஊ. உங்கள் செவிகளையும், கரங்களையும் கொடுங்கள்.
வார்த்தை ஜாலங்களை அல்ல.

2. "அறிவிற்கேற்ப " ஒரு மனம்

" இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ?"
ஆமோஸ்3:3

அ. கணவன் மனைவி ஒரு மனம் இல்லையெனில், அங்கே சமாதானக் குறைகள் உண்டு. யாக்கோபு 3:16

i. பிசாசு தாக்குவதற்கு வாய்ப்பு திறக்கிறது
ii. தேவ சித்தத்திற்கு வெளியே இருக்க வைக்கிறது
iii. தோல்விக்கு காரணமாக ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டும் படி செய்கிறது.
"நான் அப்படி சொன்னேன் " "நீ தான் எப்போதும் சரியாக நடக்கிறது போல நினைக்கிறாய் "

ஆ. ஒரு மனம் தேவச் சித்தமாய் இருக்கிறது.
மத்தேயு 18 : 19 ஒரு மனம் ஒற்றுமையைக் காட்டுகிறது.

GCI

நமது சித்தத்தின் படி ஒரு மனப்படுவதல்ல. தேவ சித்தத்தின்படி ஒரு மனப்பட வேண்டும்.

அவர் சித்தம் வெளிப்படுத்தும் விதம்:

i. அவரடைய வசனம்
ii. ஜெபம் "அவர்கள் எதைக் கேட்பார்களோ " மத்தேயு 18:19 இருவரும் அவருக்குச் செவி கொடுக்க வேண்டும்.
iii. ஒருமனப்படும்படி நாம் எடுத்துக் கொள்ளும் நேரம், தவறான ஒரு தீர்மானத்தைச் சரி செய்ய எடுத்துக் கொள்ளும் நேரத்தை விட அதிக அளவு குறைவானதாகும்.
iv. ஒரு மனப்பாட்டிற்குள் வழி நடத்துதல்
v. ஒரு மனப்படாமல் பெரிய தீர்மானங்களைத் தன்னிச்சையாக முடிவு செய்யாதிருங்கள்.

இ. தவறான வழிகளில் ஏற்படும் ஒரு மனம்

i. சச்சரவின்மை
ii. திறம் மிக்க கருத்து
iii. இணங்கிப் போதல்
iv. வல்லவரின் அதிகாரப் போக்கு
v. தந்திரமாய்க் கையாளுதல்
vi. அறிவு ' உணர்ச்சி
vii. தவறுதல்
viii. திறந்த வாசல்/ மூடப்பட்ட வாசல்

ஈ. தேவ சித்தம் பூமியில் செய்யப்படுதல் "பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும். " மத்தேயு 18: 19

GCI

**ஊ. மனைவியை மதிக்கிறவர்**

I பேதுரு 3:7 " கனத்தைச் செய்யுங்கள்"

I.மேன்மையான நிலையில் வைக்கப்படல் – மகாராணி

2. தலை சிறந்தவர் என்னும் உணர்வுக்குக் கொண்டு வருதல்

**எ. மனைவியைப் போஷித்துக் காப்பவர்**

எபேசியர் 5:20-28

**ஏ. மனைவியுடன் நெருங்கிய தொடர்புடையவர்**

எபேசியர் 5:26 பரிசுத்தமாக்குதல் – ஒருவருக்காகப் பிரித்து எடுத்தல் – சிலாக்கியம் பெற்ற ஸ்தானம்

சரியான வார்த்தைகளை விதைப்போமானால் நெருங்கிய உறவை அறுவடை செய்வோம். தவறான வார்த்தைகளை விதைத்தால் பிரிவினையை அறுப்போம்.

விதைப்பும் அறுவடையும் கலாத்தியர் 6:7-9

I. ஆவிக்குரிய பிரமாணம்

அ. இயற்கையான சட்டம் – நிறைவேற்றப்படும்

ஆ. அறியாமை அதை தடுத்து நிறுத்துவதில்லை

இ. அறுவடையைக் குறித்து வாக்குப் பண்ணப்பட்டு இருக்கிறோம்.

ஈ. நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம்

GCI

2. விதை விதைத்தல்

அ. விதையை தேவனிடமிருந்து அல்லது சாத்தானிடமிருந்து
தெரிந்து கொள்ளலாம்.

" நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும்
உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும்
பூமியையும் இன்று சாட்சி வைக்கிறேன்; ஆகையால் நீயும் உன் சந்ததியும்
பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்து கொள் " உபாகமம் 30:19,20

ஆ. இயேசு எப்போதும் ஜீவனையே விதைப்பவர் அவரே ஜீவன்
யோவான் 14:6

இ. சாத்தான் எப்போதும் மரணத்தையே விதைப்பவன்
யோவான் 10:10

ஈ. நடுநிலையில் எந்த விதையும் இல்லை

உ. நாம் எப்போதும் விதைப்பதால், எப்போதும் அறுவடை செய்கிறோம்

ஊ. நாம் மறுபடி பிறக்கும்போது ஜீவன் தரும் விதையைத் தெரிந்து
கொள்ள நடத்தப்படுகிறோம் ரோமர் 8:5

எ. பழைய சுபாவங்கள் நம்மை நமது பழைய பையிலிருந்து விதைகளை
எடுக்கப் பண்ணுகிறது.

3. நாம் விதைக்கும் விதைகள்

அ. வார்த்தைகள் " எங்கள் பிள்ளைகள் அடங்காதவைகள்"
" எங்கள் பிள்ளைகள் தேவனுக்குக்
கீழ்படிய வாஞ்சையுள்ளவர்கள்"

GCI

" என்னால் அதைச் செய்ய முடியாது"

" .. கிறிஸ்துவால் எல்லாவற்றையும்

நான் செய்ய முடியும்."

ஆ. மனப்பான்மை தாழ்மை X பெருமை

நன்றியதல் X கசப்பு

இ. செயல்பாடுகள் ஏற்றுக் கொள்ளுதல் X வெறுத்தல்

தயாள நிலை X சுயநலவாதம்

4. நாம் எப்படி விதைக்கிறோம்

அ. நம் வாழ்வில், மனைவி, பிள்ளைகளில் நாம் எப்போதும்
விதைத்துக் கொண்டிருக்கிறோம்

ஆ. இருதயமே விளை நிலம் எரேமியா 4:3–4

இ. நிலங்களின் தன்மை: கற்பாறை அல்லது முட்கள் நிறைந்த நிலம்
வசனத்தின் நீர் மற்றும் ஜெபம் நிலத்தை வளப்படுத்துகிறது.
களையெடுப்பது சுலபம்.

5. அறுவடையின் காரணிகள்

அ. காலம்: காத்திருத்தல் – தண்ணீர் – கிரியைகளால் உரமிடுதல் –
தோண்டி எடுக்காதிருங்கள்

ஆ. பெருக்கம் – அறுவடையின் பண்பு

i. மனிதன் எதை விதைக்கிறானோ அதை
ii. விதைப்பதை விட அதிகம் அறுப்போம்

GCI

iii. ஒவ்வொன்றும் எதிர்கால விதைப்புக்கு விதை தருகிறது.

iv. பிசாசு ஒரு விதையை தருகிறான் அதை விதைத்து
அதிகமாய் அறுக்க வேண்டி வரும்.

v. பெரு வளர்ச்சிக்காக அதிக விதைகள் கொடுக்கப்படுகின்றன.

6.விளைச்சலை அடையாளங் காணுதல்.

அ. நல்ல தானியங்கள் : விதைக்கப்பட்ட வித்தைக் கண்டறிந்து மேலும்
அதிகமாக விதையுங்கள்

ஆ. கெட்ட தானியங்கள்: மனந்திரும்புதல் என்பது களைக்கொல்லி
போன்றது. நேரம் எடுக்கலாம். I யோவான் I:9

7. நற்பெயரை விதைத்தல்

அ. ஆண்டவருஜடய பையிலிருந்து விதையைத் தேர்ந்தெடுங்கள்

ஆ. வார்த்தைகளைக் கவனமாய்க கையாளுங்கள்.
உபாகமம்30:I9, 2 கொரிந்தியர் 9:I0

இ. நிலத்தை ஆயத்தப்படுத்துங்கள்
ஜெபம்/ மற்றவர்களுக்கான வார்த்தை: மத்தியஸ்த ஜெபம்
மற்றும் ஆவிக்குரிய போராட்டம்

ஈ. விதைக்கும்படியாக வார்த்தையை அறிக்கையிடுங்கள்.
நீதிமொழிகள் I8:2I யோபு 22:28 மாற்கு II:23

உ. தேவையான செயல்களால் உரமிடுதல் யாக்கோபு 2:26

GCI

சாத்தான் உங்கள் சிந்தையில் தேவையற்ற விதைகளை விதைக்க முற்படுவான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். 2 கொரிந்தியர் 10:5, பிலிப்பியர் 4:8

8. சச்சரவுகளைத் தவிர்த்தல்

யாக்கோபு 3: 16, நீதிமொழிகள் 20: 23

அ) இருவர் செயல் தான் சச்சரவு வரும். அதை செய்ய மறுத்து விடுங்கள்.

நீதிமொழிகள் 15: 1

ஆ) தன்னைத் தானே நீதிகரிப்பதை விட, தவிர்ப்பது அதிக முக்கியம்.

மத்தேயு 23: 12

இ) மற்றவர்கள் சண்டையை விதைக்கையில் நீங்கள் அன்பை விதையுங்கள்.

ரோமர் 12: 21, பிலிப்பியர் 2: 3, கலாத்தியர் 5: 14,15

ஈ) உங்கள் மனைவி உங்கள் எதிரி அல்ல. எபேசியர் 6: 12

உ) உங்கள் சிலுவையை எடுத்துக் கொள்வதன் மூலம் சச்சரவைத் தவிர்த்து விடுங்கள் – நீங்கள் மரித்தவர்கள்

ஊ) தேவை வரும் போது சச்சரவுக்கு முடிவு செய்யுங்கள்

" நீ தான் காரணம்" என்று சொல்லாதீர்கள் நாவை அடக்குங்கள்

யாக்கோபு 3:2-8

அமைதியாக மூன்று நிமிடங்கள் ஜெபியுங்கள். அறிக்கை செய்து மன்னிப்பு கேளுங்கள்.

GCI

**ஐ. விளைவு**

I பேதுரு 3:7 வல்லமையான, மலையைப் பெயர்க்கும் ஜெபக்குழு

மத்தேயு 18:19 " உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒரு மனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது உண்டாகும்."

யோவான்13:25 " நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்."

## II. கிறிஸ்தவ மனைவி

குணசாலியான ஸ்திரீயைக் கண்டு பிடிப்பவன் யார்?
அவளுடைய விலை முத்துகளைப் பார்க்கிலும் உயர்ந்தது. அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும். அவன் சம்பத்துக் குறையாது.

நீதிமொழிகள் 31:10,11

**அ. கணவனின் தலைமைத்துவத்துக்குக் கீழ்படிபவள்**

எபேசியர் 5: 22-24 " மனைவிகளே, உங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்படியுங்கள்" கீழ்ப்படிதர் என்பது மனப்பூர்வமாக மற்றவர்களுடைய தேவைகள், விருப்பங்கள், உரிமை, மரியாதை முன்னிருத்தி (நம்முடையவைகளை விட) கிறிஸ்துவை கனம் பண்ணும் மனப்பாங்கு.
பிலிப்பியர் 2 3-5; I பேதுரு 3:1 -6 ; I கொரிந்தியர் 11:3,8,9 ; I தீமோத்தேயு 2:11,12 கொலோசெயர் 3:17,18,2 ; ஆதியாகமம் 3:16

அ. கீழ்படிதல் என்பது மனைவியின் கடமை கீழ்படிதல் உள்ளவராக தன்மை

GCI

அர்ப்பணிக்க வேண்டும் என்று வேதம் கட்டளை கொடுக்கிறது. கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய தீர்மானிப்பது போன்ற தீர்மானம் இது. எப்பொழுது அன்போடு, விருப்பத்தோடு தன் கணவனுக்குக் கீழ்ப்படிகிறார்களோ அப்பொழுது சாந்தம் மற்றும் அன்பின் ஆவி கணவன் இருதயத்தில் கிரியை செய்து, தன் மனைவியை சாந்தத்துடன் நடத்தி, போஷித்துக் காப்பார்.

ஆ. மனைவியின் கீழ்ப்படிதல் தொடர்ந்து. வாழ்வு முழுவதும் இருக்க வேண்டும் என வேதம் சுட்டிக் காட்டுகிறது.

இ. பணிவு ஆவிக்குரிய காரியமாயிருக்கிறது. " கர்த்தருக்கு செய்வது போலச் செய்யப்படவேண்டும். " கொலோசெயர் 3;17

ஈ. மனைவி தனது தாலந்துகள், திறமைகள், வளங்கள் மற்றும் சக்தியை கணவனுடைய வசம் வைத்து விடுவது என்பது தான் பணிவு ஆகும். கணவன் மற்றும் குடும்பத்தின் நலனுக்காக தன்மை ஒப்புவித்து, கணவனின் மேலாண்மைக்குக் கீழ் இருந்து செயல்படுகிறாள். ஒரே இலக்கை அடைய கணவனுடன் இணைந்து உழைக்கும் உடன் தோழி ஆவாள்.

உ.பணிவு அவளது மனப்பான்மையாலும், செயல்பாடுகளிலும் வெளிப்பட வேண்டும்.

ஊ. பணிவு என்பது அன்பின் செயல் வடிவம். தன் கணவன் அதிக மரியாதைக்குரியவன் என்பதையும், அவனது தேவை தன்னுடையதை விட முக்கியமானது என்பதையும் கணவனுக்குத் தெரிவிக்கிறது.

தேவனின் தெய்வீக ஒழுங்கு I கொரிந்தியர் II :3
"ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாய் இருக்கிறார். ஸ்திரீக்குப் புருஷன் தலையாய் இருக்கிறான். கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாய் இருக்கிறார்....."

GCI

## ஆ. அவளது தலைமைத்துவத்தை மதிப்பவள்

1. நடத்தை

1 பேதுரு 3:1-6 மனைவியின் குணமும், நன்னடத்தையும்

ஒரு மனைவி தன் நடத்தை மூலமாகத் தன் கணவனை மதிப்பதாகவும், தேவனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட தன் மேலான தலைமைத்துவத்தை மதிப்பதாகவும் தன் கணவனுக்குத் தெரிவிக்கிறாள்.
கணவன் மனைவியின் நடத்தையைக் கவனிக்கிறான். இந்தக் கவனிப்பு என்பது நெருங்கிய, முழுமையான விதத்தில் அவளது நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்குபவன், தொலைக்காட்சியில் மறுபடியும் உடனடியாகத் திரும்பப் போட்டுக் காண்பிப்பது போல, அவன் அவளது வாழ்க்கை அவளது வார்த்தையை ஒத்திருக்கிறதா என்று கூர்ந்து நோக்குகிறான்.

அ.அவன் பாதுகாப்பு, அரவணைப்பு அவளுக்குத் தேவை என்பதை அவனுக்குத் தெரிவிக்க வேண்டும்; ஆவிக்குரிய, உணர்ச்சிரீதியான, மன மற்றும் சரீரப்பிரகாரமான தேவை. சர்ப்பத்திடமிருந்து பாதுகாக்கப்பட ஏவாளுக்கு ஆதாம் தேவையாய் இருந்தான். ஆனால் ஏவாள் தன்னிச்சையாக செயல்பட்டு, தன்னையே சார்ந்து கொண்டதால் வஞ்சிக்கப்பட்டாள். 1 பேதுரு 3:7, 1 தீமோத்தேயு 2:14

ஆ. குடும்பத்தின் அடிப்படை தேவைக்கு உழைப்பவனாக அவள் அவனை எதிர்பார்க்க வேண்டும். ஆதியாகமம் 2:15 தேவன் மனிதனை ஏதேன் தோட்டத்திற்குக் கொண்டு வந்து அதைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் வைத்தார்.

இ. மற்ற மனிதனை விட அதிக மரியாதையும், கனமும் உண்மையும் தன் கணவனுக்குக் காண்பிக்க வேண்டும். அந்த நபர் ஆவிக்குரிய தலைவராகவோ, போதகராகவோ, மேய்ப்பராகவோ, உறவினர்

GCI

அல்லது நண்பராகவோ கூட இருக்கலாம். இவர்களை விட அதிக கனம் தன் கணவருக்குக் கொடுக்க வேண்டும்.

ஈ. அவள் அவனுக்குத் தன்னை சரீரப்பிரகாரமாகக் கொடுக்க வேண்டும். அவனது அரவணைப்பிலிருந்து தன்னை விலக்க முயற்சிக்கக் கூடாது. I கொரிந்தியர் 7: 3-5

## இ. தன் கணவரைப் புகழ்பவர்

I. மனைவியானவள் தன் கணவரை ஒரு தலைவனாக ஏற்கவும், பாராட்டவும் வேண்டும்.

அ. அவருக்குள் கர்த்தர் கிரியை செய்து கொண்டு இருக்கிறார் என்னும் நம்பிக்கை ஊட்ட வேண்டும்.

ஆ. துன்பமான நேரங்களில் உங்கள் உண்மையை அவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

இ. புகழ வேண்டிய சூழல்கள் சங்கீதம் 15

i. நீதிமானாய், குற்றமற்றவனாய் இருக்கும் போது
ii. நல்ல கிரியைகள், நீதி, நியாயம் செய்யும் போத
iii. இருதயத்திலும் வாயிலம் உண்மை இருக்கும் போது
iv. நேர்மை
v. புறங்கூறாமை, முறுமுறுக்காதிருத்தல்
vi. அயல்வீட்டாருக்குத் தீங்கு செய்யாமை
vii. தன் நண்பர்களுக்காக துணை நிற்கும்போது
viii. தேவ பக்தியுள்ள மனிதர்களை மதிக்கும் போது

GCI

ix. **தீமையையும், தீயவர்களையும் வெறுத்தல்**

x. **நஷ்டம் வந்தாலும் ஆணையைக் காத்தல்**

xi. **பணவிஷயங்களில் உண்மை**

xii. **லஞ்சம் வாங்காதிருத்தல்**

xiii. **தனக்கு நஷ்ம் வந்தாலும் தன் நல்ல குணத்தில் மாறாதிருக்கும் போது**

**ஈ. தீர்மானங்களை எடுப்பதில் கணவனின் ஆலோசனை, கருத்துக்களை கேட்க ஆரம்பியுங்கள்.**

**உ. கணவனின் கடந்த கால வேண்டுதல்கள், விருப்பங்களை நிறைவேற்ற முயலும் வகையில் சிந்தியுங்கள்.**

**ஊ. கணவனின் சாதகமான குணநலன்களின் மீது கவனம் செலுத்தும் வாய்ப்புகளை நாடுங்கள்.**

**எ. கணவனின் வேலைக்காக அவரைப் பாராட்டுங்கள்.**

**ஏ. திறந்த மனதுடன் கவனியுங்கள்**

**ஐ. தினமும் உங்கள் வாழ்த்துதலைத் தெரிவியுங்கள்**

**ஒ. கணவனின் இலக்குகளுக்கு ஆதரவாய் இருக்க நாடுங்கள்**

**ஓ. வார்த்தையினால் அல்லாமல் அவரைப் புகழும் வழிகள்**

i. **அவரது கரிசனைகளுக்குச் செவி கொடுங்கள்**

ii. **கூடுமானவரை கவர்ச்சியாய்க் காணப்படுங்கள்**

iii. **வீடு துப்பரவாகவும், சுத்தமாகவும் இருக்கட்டும்**

GCI

iv. அவருக்கு விருப்பமான உணவு வகைகளைத் தயார் செய்யுங்கள்

v. உங்கள் நேர் தொடர்பால் அவரில் ஆர்வம் காட்டுங்கள்

vi. தவறும் போது அவரின் மன்னிப்பை நாடுங்கள்

**ஈ. பாராட்டி, ஊக்கம் அளிப்பவள்**

I. மனைவி தன் வார்த்தைகளால் கணவரைப் புகழ்ந்து பாராட்ட வேண்டும்.

கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்கு பிரயோஜனம் உண்டாகும்படி பேசுங்கள்.

எபேசியர் 4: 29

அ) அவரது தலைமை, அளிப்பு, தேவபக்தி, பொறுமை, தேவனால் கொடுக்கப்பட்ட திறமைகள் மற்றும் தாலந்துகளைக் குறித்து குறிப்பிட்டவிதத்தில் அவரைப் புகழுங்கள்.

ஆ) தேவனால் கொடுக்கப்பட்ட இலக்குகளை அடைய அவரை உற்சாகப்படுத்துங்கள்.

இ) நன்றியறிதலை வார்த்தைகளால் வெளிப்படுத்துங்கள். புகழ்ந்து பாராட்டும் எந்த நபராலும் ஈர்க்கப்படுவதும் குறைத்துப் பேசுபவரை வெறுப்பதும் இயல்பாகவே எல்லா மக்களுக்கும் உள்ள குணாதிசயம்.

**உ.பிறரால் வாழ்த்தப் படுபவர்**

I) குணசாலியான மனைவி பிறரால் வாழ்த்தப்பட வேண்டும்

இருதயத்தில் மறைந்திருக்கும் நபர் அவளது நற்குணம் மற்றும்

GCI

நற்கிரியைகளால் வெளிப்படுகிறாள்.

"தேவ பக்தி உள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும்."

I தீமோத்தேயு 2: 10

"அவள் கைளின் பலனை அவளுக்குக் கொடுங்கள். அவளுடைய செய்கைகள் வாசலில் அவளைப் புகழ்க்கடவது"

நீதிமொழிகள் 31: 31

அ) அவளது ஆவிகுரிய தலைவர்கள் அவளைப் புகழ வேண்டிய சில காரியங்கள்:

i. தலைவர்களின் தேவையை புரிந்துகொள்ளுதல்

I தெசலோகியர் 5: 12,13

ii. ஞானம், பகுத்தறிவு நீதிமொழிகள் 31: 26

iii. தன் கணவரையும் பிள்ளைகளையும் நேசித்தல்

iv. தன் கணவனுக்குக் கீழ்படியும் பாங்கு

v. வீட்டுப் பராமரிப்பு

அ) அவள் பிள்ளைகள் புகழ வேண்டியவைகள் : நீதிமொழிகள் 31: 28

மற்றவர்கள் மீதான அவளது தாக்கம் நீதிமொழிகள் 31: 10

கணவனுடன் ஒற்றுமை நீதிமொழிகள் 31: 11,12

ஊக்கம், கைத்தேர்ச்சி, அவர்களது தேவையைச் சந்திப்பதில் விழிப்பும்,திறமையும் நீதிமொழிகள் 31: 26

இ) அவளது அயலகத்தார் புகழவேண்டியவைகள் :

நீதிமொழிகள் 31: 20

ஏழைகளுக்கு இரங்குதல், தயாளகுணம்,

கஷ்டப்படுகிறவர்களை விடுவித்தல் உபசரிப்பு I தீமோத்தேயு 5: 10

GCI

ஈ) முழு கிறிஸ்துவின் சரீரமும் புகழ வேண்டியவைகள்:

பரிசுத்தவான்களை விசாரித்தல் I தீமோத்தேயு 5: 10

திருமண உடன்படிக்கையில் உண்மை காத்தல் I தீமோத்தேயு 5: 9

இளம் பெண்களுக்குப் போதித்தல் தீத்து 2: 4

நீதிமொழிகள் 12: 4

"குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாய் இருக்கிறாள்; இலச்சை உண்டு பண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாய் இருக்கிறாள்."

## ஊ. சாந்தமும் அமைதலுள்ள ஆவியும் உடையவள்

1. "இருதயத்தில் மறைந்திருக்கிற குணம்" – அழியாத அலங்கரிப்பு I பேதுரு3: 4

அ. சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி

I. அழியாத – மறைத்துப் போடவோ, மேற்கொள்ளவோ அல்லது குலைத்துப் போடவோ முடியாது. இச்சையடக்கம், சாந்தம், கனம் நீதிமொழிகள் 31: 25
அமைதலும், சூழலைக் கட்டுக்குள் வைத்திருத்தலும், எவ்வித தொந்தரவையும் கொண்டு வராதிருத்தல். சாந்தம் என்பது உரிமைகளையும், எதிர்பார்ப்புக்களையும் தேவனிடம் அர்ப்பணித்து விடுவது ஆகும்

II. அமைதலுள்ள ஆவி – சமாதானம் நிறைந்த –பயம் கவலைகளைக் கலைந்து, திகில் மற்றும் எரிச்சலில் இருந்து விடுபட்டு நிற்கும் நிலை

III. இருதயத்தில் மறைந்திருக்கும் குணம் – தேவனில் நம்பிக்கை வைத்த "பரிசுத்த ஸ்திரீகள்" – மகிழ்ச்சி, சந்தோஷம், அன்பு, அங்கீகாரம் மற்றும் ஏற்றுக் கொள்ளுதல் போன்ற சகல காரியங்களின் மூல ஆதாரமும் தேவனே. நமது தேவையைச் சந்திக்கும்படியாக அவரைச் சார்ந்திருப்பதின் பலன் "திருப்தி"

GCI

## ஏ. நன்றியறிதலுள்ள ஆவி உடையவள்

I. நன்றியறிதலுள்ள ஆவி

அ. எல்லா எதிர்பார்ப்பையும் தேவனிடம் கொடுங்கள். சங்கீதம் 62:5
எதிர்பார்ப்புகள் நன்றியறிதலை அழித்து விடும்.
நன்றியறிதல் மகிழ்ச்சியின் அடிப்படையாய் இருக்கிறது.
மனிதர்கள் நன்றியறிதலுள்ள பெண்ணால் ஈர்க்கப்படுகிறார்கள்.

ஆ. எதையும் எதர்பராதிருங்கள்– எதற்கும் எல்லாவற்றுக்கும்,
மற்றும் கணவனின் அன்பு வெளிப்படும் எந்தக் காரியத்திற்கும் நன்றி
சொல்லுங்கள்.

இ. தேவ பக்தியோடு திருப்தியை வளர்த்துக் கொள்ளுங்கள்.
உங்கள் நாட்டம் மேலானவைகள் மேல் இருக்கட்டும்.
I தீமோத்தேயு 6:6–II, கொலோசெயர் 3:I,2

மனைவியின் நடத்தையே குடும்பத்தில் சுமுகமான சூழலை உருவாக்குகிறது. குடும்பச் சக்கரத்தை வாகனத்துடன் இணைக்கும் ஆணியாகச் செயல்பட கிறாள். ஆணி கழன்றால் வண்டி தன் சம நிலை இழந்து பாதிப்படையும்.

## ஐ. சூழ்நிலைக்கேற்ப செயல்படுகிறாள்

I. பதில் – சாராள் ஆபிரகாமுக்கு கீழப்படிந்தாள் I பேதுரு 3:6
"கீழ்படிந்தாள்" – முழு கவனத்தையும் ஒருவர் மீது செலுத்துதல் –
மற்றொருவரின் தேவையைச் சந்திப்பது, ஒரு நேர்மறையான உதவி செய்யும்.
பதில் செயல் – எதிர்ப்பதை விட சரியான விதத்தில் பதிலளிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

GCI

அ. கணவனுக்காக மன்றாடி ஜெபிக்கும் மனைவியாயிரு.

நீதிமொழிகள்31 :21

ஆ. கணவனின் தேவையைப் புரிந்து கொள்ள தேவனிடம் ஞானத்திற்காகக் கேளுங்கள்

இ. கணவனுக்காக எவ்விதம் ஞானமாய் ஜெபிக்க முடியும் என கற்றறியுங்கள்.

ஈ. கணவனிடம் எப்படி ஞானமாய் கேட்க வேண்டும் என கற்றுக் கொள்ளுங்கள்.

2. எஸ்தர் தன் வேண்டுதலுக்கு முன்பாக 3 நாள் உபவாச ஜெபம் மேற்கொண்டாள்.

அ. மனைவி தேவனுடன் சரியான நிலையில் நிற்கிறவளாய் இருக்க வேண்டும்.

ஆ. மனைவியின் வேண்டுதலுக்காக சரியான நோக்கம் வேண்டும்.

இ. மனைவி சரியான மனப்பான்மையுடன் இருக்க வேண்டும் – மன்னியாமை கூடாது.

ஈ. மனைவி தேவனுக்கு உண்மையுள்ளவளாகவும், தியாகம் செய்யக் கூடியவளாகவும் இருக்க வேண்டும்.

உ. சரியான நேரத்திற்காகப் பொறுமையுடன் காத்திருங்கள்.